**வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2013**

---

வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று என்பவற்றினை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு, 2005 திசெம்பர் 09 இல் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் திறைசேரி செயலாளருக்கும் மற்றும் வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கையாளர்களுக்கும் இடையில் கைசாத்திட்ட வீதிப் பராமரிப்பு நிதியத்தின் உறுதியின் II ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந் நிதிக்கூற்றுக்கள் மீதான என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தாபிப்பு

---

இலங்கை அரசாங்கமானது (ஜீஓஎஸ்எல்) அமைச்சரவையின் அங்கீகாரம் மற்றும் 2005 திசெம்பர் 09 இல் கைசாத்திட்ட நம்பிக்கைப் பொறுப்பு உறுதி ஒன்றின் மூலம் நம்பிக்கை பொறுப்பு கட்டளை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை (ஆர்எம்ரீஎவ்) செயற்படுத்துகின்றது. ஆரம்பத்தில் வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் (ஆர்டிஏ) பராமரிக்கப்பட்ட வீதிகளிற்காக நிதிகளை வழங்குவதுடன் இறுதியாக மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களால் பேணப்பட்ட வீதிகளும் வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆகவே, வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் செலுத்தப்பட்ட வீதிப்பராமரிப்புக்கான நிதிகளின் தற்போதைய பிரதான நலன்பெறுனர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையாகும். இது வகுப்பு ஏ மற்றும் பீ தர வீதிகளை பராமரிப்பதற்கான நிறைவேற்று முகவராக உள்ளது. வீதிப் பராமரிப்பு நம்பிக்கை பொறுப்பு நிதியமானது நம்பிக்கை பொறுப்பாளர் சபையால் முகாமை செய்யப்படுகின்றது. வீதிப் பராமரிப்பு நம்பிக்கை நிதியத்திற்கான நிதியளிப்பு வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இலங்கை அரசாங்கத்தின் நிதிகள் ஊடாக காலரீதியான பராமரிப்பு நிதியளிப்பதற்காக வீதித்துறை உதவிச் செயற்திட்டத்தின் ஊடாக 2012 முதல் 2014 செப்தெம்பர் வரை ஐ.அ.டொலர 10 மில்லியன் மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் மீண்டெழும் செலவினத்திற்காக ஐ.அ.டொலர் 0.5 மில்லியன் என்பன நிதியளிப்பதற்கு சர்வதேச அபிவிருத்திச் சங்கம் உடன்பட்டது.

## 1.3 நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

---

**நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் குறிக்கோள்கள்**

---

நம்பிகைப் பொறுப்பு உறுதியின் 4 ஆம் பந்தியின்படி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் குறிக்கோள்களாவன,

(அ) வீதி வலையமைப்பின் பாதிப்புக்களைத் தடுப்பதற்காக உரிய நேரத்தில் தேசிய வீதிகளின் ஒழுங்கு முறையான மற்றும் காலரீதியான வீதிப் பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதியளித்தல்.

(ஆ) நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினை முகாமை செய்து அபிவிருத்தி செய்தல் மற்றும் வீதிப் பராமரிப்பு நடவடிக்கைகளிற்கு உடனடியாக வேண்டப்படாத அவற்றின் ஏதும் ஒரு பகுதியை பொருத்தமான வகையில் செயல்நுட்பமான மற்றும் பாதுகாப்பான முதலீடுகளில் அவ்வாறான முதலீடுகளையும் பிணையங்களையும் முதலீடு செயதல் மற்றும் அவ்வாறான முதலீடுகளிலிருந்து நிதியளிப்பதற்கு அதிக வரும்படிகளை உறுதிப்படுத்துவதற்காக அவ்வாறான ஏதும் முதலீடுகளையும் பிணையங்களையும் வைத்திருத்தல், விற்றல் அல்லது வேறு வகையில் விற்றுத்தீர்த்தல்.

(இ) நாட்டில் நிலவுகின்ற சட்டங்களின்படி நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்களிற்கு ஏதுவாக அல்லது அவசியமானவை எனத்தென்படும் ஏதாவது உரிமைகள், சிறப்புரிமைகள், அனுமதிப்பத்திரங்கள் மற்றும் சலுகைகள் என்பவற்றினை ஏதாவது அத்தகைய அரசாங்கம் அல்லது வேறு அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளல்.

(ஈ) மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக எவ்வழிகளிலும் பெற்றுக்கொண்ட நம்பிக்கை பொறுப்பின் வருமானத்தை பயன்படுத்தும் அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானத்தை நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதனைத் தவிர்த்து நபர் எவரிற்கும் அமைப்பிற்குக் காசாக அல்லது வேறு வழிகளில் பகிர்ந்தளிக்கப்படுதல்.

(உ) நம்பிக்கை பொறுப்பின் ஏதாவது குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அடைந்து கொள்வதற்கு தற்செயலான அல்லது நன்மையாக்கும் அத்தகைய சகல சட்டபூர்வமான விடயங்களையும் செய்வதற்கு.

(ஊ) நம்பிக்கை பொறுப்பின் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு மிகவும் உகந்தது என எண்ணுகின்றவாறு அவர்களிற்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் தற்துணிபுகளை நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் பிரயோகிப்பதனை உறுதிப்படுத்தல்.

**1.4 நலன்பெறுனர்கள்**

நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 7 ஆம் பிரிவின்படி, துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் கப்பற்துறை அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ), மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் அல்லது அவர்களைத் தொடர்ந்து செயற்படுத்துவோர் அல்லது நம்பிக்கைப் பொறுப்பின் நலனாளியாக அரசாங்கத்தால் அங்கீகரிக்கக்கூடிய வேறு ஏதாவது அரசாங்க நிறுவனங்கள் இந்த நம்பிக்கைப் பொறுப்பின் கீழ் நலனாளியாக இருப்பார்கள் இவர்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து பணத்தைப் பற்றுவதற்கு அங்கீகரிக்கப்படுகிறார்கள்.

**1.5 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்திற்கான பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.6 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின்

பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.7 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டின் அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரி உண்டியல் முதலீடுகளின் பெறுமதி கணிப்பீட்டுத் தவறு காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் ரூபா 129,810 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உலக வங்கியால் நிதியளிக்கப்பட்ட ரூபா 63.395 மில்லியன் தொகையான காலரீதியான வீதிப் பராமரிப்புக்காக ஒப்பந்தக்காரர்களிற்கு செலுத்த வேண்டியவை கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின்படி, மொத்தச் செலவினம் ரூபா 203,127,778 ஆக காட்டப்பட்டிருந்த அதேநேரம் சமர்ப்பிக்கப்பட்ட திறைசேரி கணனி அச்சுத் தாளில் காட்டப்பட்ட நோராத்த தொகைகள் ரூபா 227,259,039 ஆக இருந்தமையால் ரூபா 24,131,261 ஆன வித்தியாசத்தைக் காட்டுகின்றது.

**2.2.3 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கமை**

சட்டங்கள், விதிகள் போன்றவற்றுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஈ/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | |
| (i) 4 ஆம் பிரிவு | நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டு அடுத்துவரும் ஆண்டின் செப்தெம்பர் 15 அல்லது அதற்கு முன்னர் தேசிய பாதீடுட்டுப் பணிப்பாளர் நாயகம் மற்றும் அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டிற்கான வருடாந்தப் பாதீடு தயாரிக்கப்பட்டு வேண்டப்பட்டவாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) பிரிவு 4.3 | வருடாந்த செயலாற்றல் அறிக்கை மற்றும் திரட்டு நிதிய மாற்றங்கள் கூற்று வேண்டப்பட்டவாறு நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 ஆந்திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 7.4.1 ஆம் பிரிவு | கணக்காய்வுக் குழுவானது ஆகக் குறைந்தது 3 மாதங்களிற்கு ஒரு தடவை ஒழுங்கான அடிப்படையில் கூட்டப்பட வேண்டிய போதிலும் இது வேண்டப்பட்டவாறு கூட்டப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்காக நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் செலவினம் ரூபா 5,359,022,747 ஆனதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 15,569,057,202 ஆகும். மீளாய்வாண்டு, முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| செலவின வகுதி | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
| --- | --- | --- | --- |
| | 2013 | 2012 | |
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| இலங்கை அரசாங்க செயற்திட்டங்கள் | 5,113,398,350 | 1,332,000,000 | 15,319,398,350 |

| | | | |
|---|---|---|---|
| கூட்டு நிதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 239,229,429 | - | 239,229,429 |
| வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதிய செயலக செலவினம் | 6,394,968 | 4,034,455 | 10,429,423 |
| | 5,359,022,747 | 1,336,034,455 | 15,569,057,202 |

### 3.2 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதிய செயலகமானது ஏற்றுக்கொள்ளப்பட்ட வீதிப் பராமரிப்பு நியமங்கள்/ கைநூலைப் பயன்படுத்தி மாதிரி அடிப்படையில் வீதிப் பராமரிப்பு மீதான தொழில்நுட்ப கணக்காய்வை நடாத்துவதில் தொடர்ச்சியாக ஈடுபட்டு பிரதான செயலாற்றல் குறிகாட்டிகளுக்கு இணங்க உறுதிப்படுத்தப்பட வேண்டும். வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதிய செயலகத்தினால் மாதிரி அடிப்படையில் கணக்காய்வை நடாத்தப்பட்டிருந்த போதிலும் உரிய மற்றும் முறையான நியமம் இனங்காணப்பட்டிருக்காததுடன் இனங்காணப்பட்ட பல்வேறு விடயங்களை அறிக்கைக்கு பிரயோகித்திருக்கவில்லை. மேலும், உரிய தரப்பினர் இனங்காணப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவாவென கணக்காய்விற்கு சான்றுகள் கிடைத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ii) நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 19 ஆம் பிரிவின்படி, நிலையான வீதிப் பராமரிப்பு நிதிகளை வழங்குவதில் நம்பிக்கைப் பொறுப்பின் வினைத்திறனை மதிப்பிடுவதற்கும் நம்பிக்கைப் பொறுப்பின் செயல் முன்னேற்ற வழிகளைப் பரீட்சிப்பதற்கும் நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாடுகளை நிதியம் தொடங்கியதிலிருந்து 3 ஆண்டுகளின் பின்னர் மீளாய்வு செய்ய வேண்டும். நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் 2006 சனவரி 1 இலிருந்து செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும், நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் முகாமைத்துவ சபை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி மற்றும் பௌதீக செயலாற்றலை மீளாய்வு செய்திருக்கவில்லை.

(iii) 2005 ஒத்தோபர் 25 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 4 ஆம் பந்தியின்படி, அரசாங்கமானது பெற்றோல் மற்றும் டீசல் விற்பனைகளிலிருந்து அரசாங்கம் பெறுகின்ற வருமானத்திலிருந்து 2006 சனவரி 01 தொடக்கம் செயற்படும்படியாக ஒரு லீற்றர் பெற்றோலுக்கு ரூபா 1 மற்றும் ஒரு லீற்றர் டீசலிற்கு ரூபா 0.50 ஒதுக்கி வைக்கப்பட்டு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். இந்த நிதியம் அமுலாக்கப்படாமையால் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டை அடைய முடியாதிருந்தது.

(iv) சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் வீதித்துறை உதவிச் செயற்திட்டத்திற்கும் இடையில் கைசாத்திட்ட செயற்திட்ட தாளின் படி, காலரீதியான பராமரிப்புக்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் 7 மில்லியன் பயன்படுத்தப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், பிரேரணையை அமுலாக்க தவறியமை காரணமாக, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் 1.5 மில்லியனிற்கு சமமான ரூபா 203 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(v) வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை வேலைகளிற்காக ஏற்பாடுகள் இல்லாத போதிலும் வீதிப் பராமரிப்பு நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் ஊடாக மேல் மாகாணத்திலுள்ள ஏ மற்றும் பீ வீதிகளின் வீதிப்பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 828,829,239 தொகையான நிதிகளில் ரூபா 22,230,726 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது.

(vi) வீதித்துறை உதவிச் செயற்திட்டத்தின் கீழ் வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதிய செயலகத்தை தாபிப்பதற்கு தொழில்நுட்ப உதவியின் ஆலோசனை சேவைக்காக ரூபா 81,550,939 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்த போதிலும் ஆலோசனையாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைகளின் பின்வரும் சிபார்சுகள் முழுமையாக அமுலாக்கப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

| **கொள்கை இல** | **விபரங்கள்** | **அவதானிப்பு** |
|---|---|---|
| xix | வீதி அபிவிருத்தி அதிகாரசபை / வீதி முகவர்கள் என்போருக்கான நிதிகளின் விடுவித்தல் நம்பிக்கை பொறுப்பாளர் சபையால் அங்கீகரித்து வெளியிடப்பட்ட வீதிப் பிரேரனைகளிற்காக மாத்திரம் வீதிப் பராமரிப்பு நம்பிக்கை பொறுப்பு நிதிய செயலகத்தால் செய்யப்பட வேண்டியிருந்தது. | ரூபா 5,352.6 மில்லியன் தொகையான வீதிப் பிரேரனைகளின் அமுலாக்கலிற்காக பீஓரீ இன் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| xxi | வீதிப் பராமரிப்பு நம்பிக்கை பொறுப்பு நிதிய செயலகம் மாதிரியொன்றின் அடிப்படையில் நிதிக் கணக்காய்வை நடாத்துவதில் தொடர்ச்சியாக ஈடுபட்டிருக்க வேண்டும். | வீதிப் பராமரிப்பு நம்பிக்கை பொறுப்பு நிதியம் எந்தவொரு நிதிக் கணக்காய்வையும் நடாத்தியிருக்கவில்லை |
| xxix | வீதிப் பராமரிப்பு நம்பிக்கை பொறுப்பு நிதிய செயலகம் அடுத்துவரும் ஆண்டிற்காக வீதிப் பராமரிப்பு நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் முகாமைக்காக அதன் சொந்த பாதீட்டை தயாரித்து தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு சமர்ப்பட்கப்பட்டிருக்க வேண்டும். | பாதீடானது தயாரிக்கப்பட்டு தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.3 பௌதீக செயலாற்றல்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் தொடர்பான வீதிப் பராமரிப்பு வேலைகளின் பௌதீக முன்னேற்றம் பின்வருமாறு உள்ளன.

| | விபரங்கள் | 2013 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு | 2013 திகெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் | பூர்த்தியாக்கப்பட வேண்டிய திகதி | பூரத்தியாக்கப்பட்ட நீளம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | (கிமீ) | (கிமீ) |
| 01 | ஒழுங்கான பராமரிப்பு | 1,835,000,000 | 2,701,633,680 | 13,204.0 | 13,204.0 |
| 02 | தொடர்ச்சியான வேலைகள் | 1,000,000,000 | - | - | - |
| 03 | முன்னுரிமை பராமரிப்பு | 2,505,000,000 | 1,436,356,316 | - | - |
| | அஸ்பற் கொங்றீட் மேல்விரிப்பு | - | - | 9.0 | 7.6 |
| | மணல் பரப்புதல் வேலைகள் | | | | |
| | மரத்துண்டு பரப்புதல் வேலைகள் | | | 700.0 | 595.0 |
| | வெடிப்புகள் மூடுல் வேலைகள் | | | | |
| 04 | உட்கட்டமைப்பு முன்னேற்றம் | 760,000,000 | | | |
| 05 | வீதி விளக்குகள், வீதிச் சமிஞ்சைகள், வீதி அடையாளங்கள் மற்றும் வீதி உபகரண பொருத்துகைகளின் பராமரிப்பு | 780,000,000 | | விபரங்கள் காணப்படவில்லை | |
| 06 | அவசர வேலைகள் | 600,000,000 | 975,408,354 | | |
| 07 | பெரிகளின் செயற்பாடும் பேணுகையும் | 20,000,000 | | | |
| | | 7,500,000,000 | 5,113,398,350 | | |

## 3.4 முகாமைத்துவ வினைத்திறனின்மை

கணனி கணக்கீட்டுப் பொதி ரூபா 113,097 செலவழித்து அமுலாக்கப்பட்டிருந்ததுடன் சேவைக்கட்டணங்கள் ரூபா 12,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்குகள் கையால் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 3.5 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2011 ஏப்ரல் 29 இல் இலங்கை சனநாயக சோசலிச குடியசிற்கும் சர்வதேச அவிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திட்ட நிதியளிப்பு உடன்படிக்கையிலுள்ள இணைப்பின் 01 பட்டோலை மற்றும் 17 ஆம் பந்தியின்

பிரகாரம் உலக வங்கி நிதிகள் வீதிப் பராமரிப்பு வேலைகளிற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும் உலக வங்கி நிதிகள் உலக வங்கியிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளாமல் மூலதன வேலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி வேலைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன என கணக்காய்வு பரிசோதனையில் வெளிப்பட்டது.

(ii) வெயாங்கொடை- ருவான்வெல்ல வீதி மற்றும் எட்மன்ட் வீதி மற்றும் காலியின் பண்டாரநாயக்கா வீதி என்பவற்றின் பூர்த்தியாக்கல் சான்றிதழ் முறையே 2013 திசெம்பர் 23 மற்றும் 2013 திசெம்பர் 24 அளவில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்பட்டிருந்த போதிலும் மேற்குறிப்பிட்ட ஒப்பந்தங்களின் மிகுதி வேலைகள் 2014 ஏப்ரல் 04 வரை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2011 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய கடிதத்திற்கு முரணாக, தகைமையுடைய உத்தியோகத்தர்கள் வீதிப் பராமரிப்பு நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் கணக்காளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளிற்காக சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 வாகனங்களின் பாவனை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1999 ஒக்தோபர் 8 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையிற்கு முரணாக வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தனியார் உரிமையாளரிடம் வாடகை அடிப்படையில் 3 வாகனங்களை பெற்றிருந்ததுடன் ரூபா 2,137,367 ஆன வருடாந்த கொடுப்பனவு மீளாய்வாண்டிற்கான வாகன வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் 3 வாகனங்களை வாடகைக்கு பெற்று பயன்படுத்தியிருந்த போதிலும் அந்த வாகனங்களின் நிர்வாகத்தின் பொறுப்புக்காக குறிப்பாக உத்தியோகத்தர் எவரும் இருக்கவில்லை.

(iii) உரிய சாரதி வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணை தயாரிக்கப்பட்டு நிர்வாக உத்தியோகத்தரால் பரிசோதிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் வாகனத்தில் பிரயாணம் செய்த உத்தியோகத்தர் நி.பி 1645 இலுள்ள அறிவுறுத்தல்களிற்கு முரணாக 2013 சனவரி 08 முதல் 2013 யூன் 10 வரையான காலத்திற்காக ஓட்ட அட்டவணை தயாரிக்கப்பட்டு அவருடைய கையெழுத்தையிட்டிருந்தார்.

**4. கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்திட்டம்**

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின்படி செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானித்த குறைபாடுகள் அவ்வப்போது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வாகனங்களின் பாவனை
(ஆ) நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் செயற்பாடுகள்
(இ) கணக்கேடுகளின் பேணுகை